Registered No. M. 2880 "SIDDHANTA..."
Vol. 43 — No. 11

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே'

மலர் 43 | சாதாரண கார்த்திகை 1970 நவம்பர் | இதழ் 11

உள்ளுறை

இதழாசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக்கூட்ட அறிவிப்பு.

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் 29—11—70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, ஆண்டுவிழா, ஆங்கில சித்தாந்தா, சமாஜத் தேர்வுகள் முதலியன பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் அவசியம் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர்.

(செயலாளர்)

கார்த்திகைத் திங்கள் சிறப்பு நாள்கள்

8 (23-11-70) உத்திரம்—மெய்ப்பொருள் நாயனார் விழா

9 (24—11—70) அத்தம்—ஆனாய நாயனார் விழா

15 (30—11—70) மூலம்—மூர்க்க நாயனார் விழா

16 (1—12—70) பூராடம்--சிறப்புலி நாயனார் விழா

26 (11—12—70) கார்த்திகை—கணம்புல்ல நாயனார் விழா

do —திருக்கார்த்திகை விளக்கீட்டு விழா.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையின் 85ஆம் ஆண்டு நிறைவு விழா 18-10-70ல் நூற்றுக்கால் மண்டபத்தில், காலை "திருக்குறள் வேள்" திரு. G. வரதராஜனார் B.A. அவர்கள் தலைமையில், ஈரோடு திரு. அ. ஞானசம்பந்த முதலியார் அவர்கள் "உள்ளத்திற் கள்வன்" என்ற தலைப்பிலும், மாலை திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள் தலைமையில், தேவகோட்டை, "பாலகவி" திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் "கருத்தின் பயன்" என்ற தலைப்பிலும் அரிய விரிவுரைகள் நிகழ்ந்த மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. செயலாளர் திரு. சிவப்ரகாசம் நன்றி கூறினார். 1—11—70 அன்று பெரியபுராணச் சொற்பொழிவும் நிகழ்ந்தது.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 43 | சாதாரண ஹு கார்த்திகை நவம்பர் 1970 | இதழ் 11

திருவிசைப்பாவில் காணப் பெறும் ஐயங்கள்

(துணையாசிரியர்)

திருவிசைப்பா நம் சைவ சமயத்தவரால் ஒன்பதாந் திருமுறையாகப் போற்றப்பெறும் சிறந்த தெய்வத் தமிழ் நூலாகும். ஆனால் சைவப் பெருமக்கள் அந்நூலைப் போற்றினரே யொழிய அந்நூற் கணடங்கியுள்ள பாக்களில் பலவற்றைக் கைசோர விட்டுள்ளனர்.

அடைவுறுமா ளிகைத்தேவர் நான்கு சேந்தர்
அன்புறுபல் லாண்டொன்றோ டிசைப்பா மூன்று
திடமுடைய கருவூரர் பத்து வீறிற்
சிறந்தகா டவரிரண்டு கண்டர் வேணாடர்
படிபுகழொவ் வொன்றுதிரு வாலி நான்கு
பன்னுபுரு டோத்தமனா ரிரண்டுசே திராய
ருடையதிருக் கடைக்காப்பொன் றாகவிரு பத்தொன்
பானோது செய்யுள்முந் நூற் றறுபதினோ டைந்தே.

மேற்கண்ட பழம் பாடலிலிருந்து பதிகம் இருபத்தொன்பதென்றும் அவற்றிலடங்கிய செய்யுள் முந்நூற்

றுபத்தைந்தென்றும் தெரிய வருகின்றது. திருப்பல்லாண்டும் இக் கணக்கிலடங்கும். தற்போது இருபத்தொன்பது பதிகங்கள் கிடைத்தாலும் அவற்றிலுள்ள பாக்கள் முழுவதும் கிடைக்கவில்லை. 301 பாக்களே கிடைத்துள்ளன. எஞ்சிய 64 பாக்களைக் கைசோர விட்டுள்ளனர். தற்போதுள்ள 301 பாக்களையாவது நன்முறையில் பெற்றுள்ளனராவென்றால் அதுவுமில்லை. பல விடங்களில் திருவிசைப்பாவினைப் படிப்போருக்கு ஐயம் எழாமற் போகாது. "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்னும் பழமொழி இத் திருவிசைப்பாவுக்கும் மிகப் பொருந்தும். பல விடங்களில் பாக்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் உண்மைப் பாடம் காண இயலாமல் துன்புற வேண்டியநிலை ஏற்படுகின்றது.

நம் திருமுறைகளில் தோய்ந்த புலமைப் பெருக்குடைய காஞ்சிபுரம் ஞானப்பிரகாசர் ஆதீனத்துத் தலைவர் அவர்களுடன் ஒருமுறை திருவிசைப்பாவினைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது அவர்கள் "திருவிசைப்பா ஏடெழுதுவோரால மிகவும் சிதைக்கப் பெற்றுள்ளது என்று கூறி வருந்தி, சில எடுத்துக் காட்டுகளும் திருவாய் மலர்ந்தருளினார்கள். பின் நம் சமாஜச் செயலாளர் திரு. மு. நாராயணசாமி முதலியார் அவர்கள் மணிவிழா நினைவாக சமாஜப் பதிப்பாகத் திருவிசைப்பாவினை வெளியிடும் பணியை யான மேற்கொள்ள நேர்ந்தது. அவ்வமயம் அச்சியடிகளார் கூறிய உரைகள் சாலப் பொருந்தும் என உணர்ந்தேன். அப் பதிப்பில் சில திருத்தங்கள் செய்ய முடிந்ததே தவிர முழுவதும் செய்ய என் மனம் இடந்தரவில்லை. ஆன்றோர் செய்யுளில் தக்க ஆதாரமின்றித் திருத்தப் புகுவது நன்றன்று என்பது கருதி ஆதாரத்தோடுள்ளவற்றை மாத்திரம் சில திருத்தி வெளியிட்டேன். பின்னும் சிலவற்றையும் அறிஞருலகுக்குமுன் வைக்கின் நாளாவட்டத்தில் தக்கவாறு பலன் கிட்டும் எனபது கருதியே இது எழுத முற்பட்டேன்.

I. திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாவில் 2. கோயில் என்னும் பகுதியில் பதினொரு பாக்கள் இருக்கின்

றன. அவற்றுள் முதல் நான்கு பாடல்களில் பாட்டு தோறும் 'கூத்தா' எனச் சேய்மை விளி வருகின்றது. ஆனல் ஐந்தாம் பாடல் முதற்கொண்டு ஈற்றுச் செய்யுள் முடிய 'கூத்த' என்று அண்மை விளி வருதல் பொருந் தாது எனக் கருதுகின்றேன். பாடிய பெரியோர்கள் ஒழுங் குறத்தான் பாடியிருப்பார்கள். ஏடெழுதினோர் அண்மை விளியைச் சேய்மை விளியாக்கினர்களோ சேய்மை விளியை அண்மை விளியாக்கினர்களோ அறியக் கூட வில்லை.

II. சீர் பிரிப்புப் பலவிடங்களில் முன் பதிப்புகளில் சரியாகவில்லை. அதனால் நாமும் சீர் பிரிக்கும்போது இடர்ப்பட நேர்கின்றது. எடுத்துக் காட்டாக 3. கோயில் —உறவாகிய யோகம் என்ற பகுதியில் சில பாடல்களில் சீர் பிரிக்கும்போது ஓசை ஒத்து வரவில்லை. இடர்ப்பட்டே சந்தத்தை இயைத்துப் பாட வேண்டியுள்ளது.

III. அப்பகுதியிலேயே 11-ஆம் பாடல் வருமாறு!—

உற்றாய் என்றும் உன்னை யன்றி மற்றொன்
றுணரேன்என் னும்உணர் வுகள்கலக்கப்
பெற்றாய ஐந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிணிதீர்வெண் ணீறிடப் பெற்றேன்என்னும்
சுற்றாய சோதி மகேந்தி ரம்சூழ
மனத்திருள் வாங்கிச்சூ ழாதநெஞ்சிற்
குற்றாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

இப்பாடலில் "உணர்வுகள் கலக்கப்பெற்று" என்றி ருப்பதினும் "உணர்வுள் கலக்கப்பெற்று" என்றிருப்பது மிகவும் பொருத்தம் போற்றுகின்றது. கள் விகுதி மிகவும் பிற்காலத்தது. முற்காலத்து மிகவும் அருகி ஓரோ வழி காணப்பெறும். மேலும் இவ்விடத்து ஐந் தெழுத்தினைக் கூற உணர்வுள் கலக்கப் பெறுதல்லை இன்றியமையாதது. உணர்வுகள் கலக்கப் பெறுவது வேண்டாதது. ஆகவே பொருட்பொருத்தம், ஓசை நயம்

முதலிய எவ்வாற்ருனும் இப்பாடமே தகுதியாகலாம் என நினைக்க இடமேற்படுகின்றது. அறிஞருலகம் ஆய்க.

IV. திருவாலியமுதனுர் திருவிசைப்பாவில் கோயில்-பாதாதிகேசம் என்னும் பகுதியில் 8-ஆம் பாடல் வருமாறு :—

செய்ய கோடுடன் கமல மலர்சூழ்தரு
தில்லை மாமறை யோர்கள் தாம்தொழ
வையம் உய்யநின்று மகிழ்ந்
தாடுசிற் றம்பலவன்
செய்ய வாயின் முறுவலும் திகழும்
திருக்காதும் காதினின் மாத்திரைகளோ
டைய தோடு மன்றே
அடியேனையாட் கொண்டனவே.

இப்பாடலில் கமல மலர்சூழ்தரு என்ற விடத்தில் ஓசை மிகவும் இடர்ப்பட்டு ஒலிக்க வேண்டியுள்ளது. "கமலஞ் சூழ்தரு" என்றிருக்கின் ஓசை சரியாயிருக்கும். ஏடெழுதுவோர் குறையால் இப்பிழை ஏற்பட்டதெனக் கருதலாம். இவற்றை யெல்லாம் மனத்துட்கொண்டு இன்னுமொரு முறை பழங்கால ஏடுகளைத் தக்காரைக் கொண்டு பார்க்கச் செய்து ஒரு திருத்தமான திருவிசைப் பாப் பதிப்பு வெளிவரின் மிகவும் சைவவுலகம் நன்றி பாராட்டும்.

V. சேதிராயர் அருளிய திருவிசைப்பாப் பாக்கள் அந்தாதித் தொடையில் உள்ளவை. ஆனுல் முதல் எட்டுப் பாடல்கள் அந்தாதியாக வந்து பின்னிரு பாடல்கள் அந்தாதியாக வரவில்லை. ஆகவே இடையில் சில பாக்கள் விடுபட்டுப் போயுள்ளன எனபதற்கையமில்லை. அவை யாவை என்பதனை அறிதல் ஆராய்ச்சியாளர் கடனுகும்.

இவை போன்று இன்னும் ஊன்றிப் படிப்பின் திரு விசைப்பாப் பாடல்களைச் செம்மையாகப் பதிப்பித்து

வெளியிட வாய்ப்பேற்படும். தக்க பெருஞ் சைவச்செல்வர்கள் தங்கள் கருத்தை இச்சமயப் பணியின்பால் செலுத்துவார்களாக. எல்லாம் வல்ல இறைவனும் அவர்களுக்கு உள்ளிருந்து தன் அருள் வலத்தால் தூண்டி ஆவன செய்ய அவன் தாள்களையே இறைஞ்சுகின்றேன்.

வாழ்க உலகெலாம்.

குயிலாலந்துறை.

(மு. அ.)

அப்பர் சுவாமிகள் அடைவு திருத்தாண்டகம் இறுதிப் பாடலில் துறை என்ற முடிபுடைய தலத்திருப் பெயர்கள் பதின்மூன்றைக் குறிப்பிடுகின்றார்.

கயிலாய மலையெடுத்தான் கரங்களோடு
சிரங்களுரம் நெரியக்கால் விரலாற் செற்றோன்
பயில்வாய பராய்த் துறை தென் பாலைத்துறை
பண்டெழுவர் தவத்துறைவெண் துறை பைம்பொழிற்
குயிலாலந்துறைசோற்றுத் துறைபூந் துறை
பெருந்துறையுங் குரங்காடு துறையினோடு
மயிலாடுதுறை கடம் பந்துறை ஆவடு
துறைமற்றுந் துறையனைத்தும் வணங்கு வோமே.

இங்குச் சொல்லப்பட்ட துறைகளில் பராய்த்துறை, பாலைத்துறை, வெண்துறை, சோற்றுத்துறை, (பேணு) பெருந்துறை, மயிலாடுதுறை, குரங்காடுதுறை, கடம்பந்துறை, ஆவடுதுறை என்பன பாடல் பெற்ற தலங்கள். தவத்துறை, குயிலாலந்துறை, பூந்துறை என்பன பாடல் பெறாத தலங்கள்; இவை வைப்புத் தலங்கள் எனப்படும். தவத்துறை என்பது திருச்சி ஜில்லாவிலுள்ள லால்குடி என்ற பெயர் வாய்ந்த சிறப்புப் பொருந்திய பெரிய தலம். பூந்துறை

என்பது, திருநெல்வேலி நகரில் சிறப்பு மிக்கதாகிய சிந்து பூந்துறை என்னும் தாமிரபரணித் துறையாகும். மற்றது குயிலாலந்துறை.

இவ்வூர் மாயூரத்துக்கு அருகே உள்ளது. மயிலாடு துறைக்கு மிக அருகே குயிலாலந் துறை என்பதும் சிந்திக்கத் தக்கது. மாயூரம் டவுன் இரயில் நிலையத்தி லிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் கப்பிச்சாலையில் ஒரு மைல் சென்றால் இவ்வூரை அடையலாம். ஒதுக்கமான இடம், ஊர் செழுமையாகத் தெரியவில்லை.

இவ்வூர் இப்போது நலத்துக்குடி (நல்லத்துக்குடி) என்று வழங்குகிறது. அப்பர் தேவாரம் அடைவு மூன்றும் தாண்டகப் பாடலின் முதல் வரியில் "நற்கொடிமேல் விடை யுயர்த்த நம்பன் செம்பங்குடி நல்லத்துக்குடி என்பது சிலர் கருத்து. ஆனால், அப்பர் பொதுவாக ஓர் ஊரையோ கோயிலையோ ஒரே பதிகத்தில் இருமுறை குறிப்பிடுதல் இல்லை. ஆதலால் இவ்வூர் குயிலாலந்துறை என்று கொள்ளும்போது, இதுவே நல்லக் குடி என்று கொள்வதற் கில்லை. இங்கு சுவாமி ஆலந்துறையப்பர்; அம்பிகை குயி லாண்ட நாயகி; இப் பெயர்களால் குயிலாலந்துறை என்ற பெயரின் பொருத்தம் நன்கு விளங்கும். வடமொழியில் வடவாரண்யரேசுவரர், கோகிலாம்பாள்.

சில மாதங்கள் முன்வரையில் இங்குக் கோயிலே இல்லை, சுவாமி மட்டும் 24-மணி நேரமும் சூரிய சந்திர தாரகைங் களின் பூசையையும், வருண பகவானது அபிஷேகத்தையும் ஏற்றுக் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தார் இப்போது நாகை உதவி அறநிலைய ஆணையர் திரு. புலியூருடையான் அவர்களுடைய ஊக்கத்தாலும் அறங்காவலர் திருஇந்தளூர் சுப்பிரமணியன் செட்டியார் என்ற இளைஞருடைய பெரு முயற்சியாலும புதிதாகக்கோயில் நிர்மாணிக்கப் பெற்று 8—7—70 அன்று காலை குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது.

மேற்குப்பார்த்த சந்நிதி. சுவாமிக்கும் அம்பிகைக்கும் கருவறையும, அர்த்தமண்டபமும் கட்டப்பட்டுள்ளன. முன் புறம் ஓடு வேய்ந்த மகா மண்டபம். கோயிலே இவ்வளவு தான். வெளியே மண் பிராகாரம். சுற்றிச்செங்கல் சுவர்; திருத்தப் பட வேண்டும். சுவாமி நடுத்தர உருவினர். அம்பிகை அழகிய சிறிய திருவுரு; வேறு உற்சவ மூர்த்தி கள் இல்லை. மகா மண்டபத்தில முன்னமே இருந்து இடிந்து போன கோயிலிலிருந்த மூர்த்திகளை வைத்திருக்கிறார்கள். தென்புறத்தில் மகா கணபதி, பெரிய உருவம். வடபுறத்தில் தேவியரோடு கூடிய முருகன். அடுத்து, வடக்கு நோக்கிய வாறு சண்டேசுவரரும தக்ஷிணமூர்த்தியும் வைக்கப் பட்டுள்ளனர். மூர்த்திகள் அழகிய வடிவினர். இக்கோயில் அமைக்கப் பெறுமுன் இத் திருவுருவங்கள் மண்ணில் உருண்டு கிடந்தன. இப்போது இந்த அளவு நிர்மாணம் ஏற்பட்டிருப்பது பெரிய சிவபுண்ணியம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இதற்குக் காரணமாக இருந்தவர்களைச் சைவ உலகம் பெரிதும் போற்ற வேண்டும்.

'இமையத்து, குயிலாலுவத்து உமையொரு பாகனை வணங்கினர்' என்று சிலப்பதிகாரம் நடுகல் காதை கூறும். அது இமயான் பக்கத்து ஒரு பகுதி என்று அரும்பத உரைகாரர் கூறுகிறார். அது வேறு, அப்பர் கூறும் தலம் வேறு.

தொண்டர் சீர்பரவுவார்

(வித்துவான் சி. குமரேச பிள்ளை)

திருத்தொண்டர் பெருமைகளைப் பரவுவதிலே சிறப் புடைப் பணியாகக் கருதி, தில்லைக் கூத்தப் பெருமான் அருளிய ஞானச் சுடரொளியில் நின்று, திருத்தொண்டர் புராணத்தினை, சைவ உலகம் 'பெரிய புராணம்' எனப்

போற்றும் வகையில் விதந்தோதி 'தொண்டர் சீர்பரவு வார்' என அநபாயச் சோழனால் பாராட்டப் பெற்ற பெருமைக்குரியவராய் விளங்கியவர் அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார் பெருமானவர்.

தமிழகத்தில் இன்றுள்ள தென்னார்க்காடு, வட ஆர்க் காடு, செங்கல்பட்டு மாவட்டங்களைக் கொண்ட தொண்டை நன்னாடு பழம்பெருமை யுடையது. 'தொண்டை நாடு சான்றோருடைத்து' எனப் புலவரால் போற்றப்பெறும் பேறுபெற்றது பாலாறு சுரந்தளிக்க வளம் நிரம்பப்பெற்றது. அந்நாட்டிலே அடங்கியிருந்த இருபத்துநான்கு கோட்டங்களிலே புலியூர்க்கோட்டம் என்னும் நிலப்பகுதியிலே அமைந்தது குன்றைவளநாடு. அந்நாட்டில் கயல மீன்கள் புரளும் வயல்களால் சூழப்பட்ட ஊர் குன்றத்தூர். முருகப்பெரு மான் கோயில கொண்டருளிய குன்றினையுடைமையால் குன்றத்தூர் எனப்பட்டது. அவ்வூரில் வேளாண்மரபில் சேக்கிழார் குடியில், அக்குலம் செய்த தவப்பயனாய்த் தோன்றியவர் அருண்மொழித் தேவர். இவர் இளமையி லேயே பல கலைகளிலும் வல்லவராய் அறிவில் முதிர்ந்தவ ராய் விளங்கினர்.

அக்காலையில் அந்நாட்டை ஆண்டு வந்த சோழப் பேரரசர், அநபாயன் எனனும் சிறப்புப் பெயர்பூண்ட வரும், சிவப்பற்றுடையவரும், தமிழ்ப்பற்றுடையவரும் ஆகிய இரண்டாவது குலோத்துங்கன் என்பவர். அம் மன்னரது அவையில் தக்கதோர் பணியில் அமர்ந்திருந் தவர் அருண்மொழித் தேவரது தந்தையார் ஒரு நாள் அரசர், அவையிலே மூன்று வினாக்களை விடுத்தார். அவை, "மலையில் பெரிது எது?", "நிலத்திலும் பெரிது எது?", "கடலில் பெரிது எது?" என்பன. மன்னன் உள்ளக் குறிப்பு யாதென அறியமாட்டாத அவைப்புலவர் விடை பகராது வறிதே திரும்பினர். அருண்மொழித் தேவரது தந்தையாரும் அவைபற்றிச் சிந்தனையிலாழ்ந்தவாறே தம் இல்லமடைந்தார். தந்தையாரின் மனநிலையை உய்த் துணர்ந்தார் தாயர். கவலைக்குக் காரணம் யாதென வின

வினர். தந்தையாரும் உண்மையைப் பகர்ந்தார். வினக்களைக் கேட்ட அளவிலே முகமலர்ச்சி கொண்டார் அருண்மொழியார். எளிதாக மூன்று குறட்பாக்களை விடையாகப் பகர்ந்தார். அவை :—

"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"
"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"
"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது" — என்பன

கேட்ட தந்தையார் வியந்தார்; மகிழ்ந்தார; அரசவை சென்றார்; மன்னன் வினவிற் கேற்ற விடையளித்தார். மன்னரும் பெருமகிழ்வு கொண்டார். இவ்விடைகளை எவ்வாறு கண்டீர் என அரசர் வினவினர். தம் தநயன் அருண்மொழித் தேவன் நவின்றமையை எடுத்துரைத்தார் தந்தையார். உடனே அரசர் அருண்மொழித்தேவரை அழைத்துவரச் செய்தார். அவரது அறிவின் விளக்கத்தை நேரில் கண்டார். கருவியும் காலமும் செய்கையும், செய்யும் அருவினையும் கருதிச் செய்பவர் இவரே யெனத் தமிழ் மன்னர் உணர்ந்தார். அவரைத் தம் அமைச்சருள் முதல்வராக அமர்த்தினர். இந்நிகழ்ச்சியைக் கம்பர் திருக்கை வழக்கம் என்னும் தம் நூலிலே

"..............................காவலவன்
மண்ணில் கடலில் மலையில் பெரிதென்? என
எண்ணியெழு திக்கொடுத்த ஏற்றக்கை"
என வியந்து துதிக்கின்றார்.

அருண்மொழித் தேவரும் அரசியல் காரியங்களைப் பல்லாற்றான் ஆராய்ந்தறிந்தும், முற்றுவிக்கும் திறனறிச் செய்தும், திறனுடையார்பால் துணிவுடன் சொல்லிச் செய்வித்தும் திறம்பட நடாத்தினர். இவ்வாறு அரசியல் தொண்டைச் செய்யும் கடப்பாட்டின் முறையில் புற உணர்வு நின்றாலும், அக உணர்வு சோழ நாட்டிலுள்ள

திருநாகேச்சுரம் என்ற தலத்திறைவன்பால் ஈடுபட்டு நின்றது. அப்பெருமானைத் தம் ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு வழிபட்டு வந்தார். நாள்தோறும் அப் பெருமானை வழிபடுவதற்குத் தம் அமைச்சுத் தொழில் இடம்கொடுக்கவில்லை. எனவே தமது குன்றத்தூரிலேயே திருக்கோயிலும் திருமடவளாகமும் அமைத்து, அதற்குத் 'திருநாகேச்சுரம்' எனப் பெயரிட்டு ஆலய வழிபாடும் முட்டின்றிச் செய்து வந்தார். இவ்வாறு ஈசன்பால அன்பினுல் மெய்த்தழைந்து விதிர்ப்புறு சிந்தையராயும், தை அரசியல் திருத்தொண்டு செய்கடப்பாட்டினராயும் விளங்கினுர். இவரது தொண்டின் பெருமையை உணர்ந்த அரசர், இவர்க்கு 'உத்தம சோழப்பல்லவர்' எனப் பட்டம் தந்து பாராட்டினுர். உத்தம சோழப் பல்லவரென்பது சோழ அரசரால் 'உத்தமர்' எனத் தெரிந்து கொடுத்த பட்டம் எனப் பொருள்தர நிற்கின்றது.

அந்நாளில் சீவகசிந்தாமணியும் பிற சமண நூற்களும் நாட்டில் பரந்து நாட்டவரது மனத்தை உத்தமமான சைவ நெறியிலிருந்து பிறழவைத்துக் கொண்டிருந்தன. அதனுல் உள்ளம் நைந்த அருண்மொழித் தேவர், நாட்டவர் மனப்போக்கை மாற்றும் வகையைத் திருவருள் துணைகொண்டு நாடிக்கொண்டிருந்தார். அதுகாலையில் ஒரு நாள் அரசவையோர் அச்சீவகசிந்தாமணி யெனும் சிற்றின்பப் பகுதிகள் நிறைந்த நூலையே விரும்பிப் படிக்க, அரசரும் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தார். அதுகண்ட அருண்மொழித் தேவரது உள்ளம் வெந்த புண்ணில் வேல் நுழைந்ததுபோலாயிற்று.

"அறிகொன் றறியா னெனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்"

என்பதனை யுன்னிய அருண்மொழித் தேவர் அரசரை நோக்கி, 'நீவிர் விரும்பிப் பாராட்டிவரும் இச்சமண நூல் இம்மை மறுமை வீடு எனும் மூன்றிற்குமாகாது. இதை விட்டு உத்தமமாகிய சிவகதைகளைப் பயின்ருல் அம்முப் பயனும் கிடைக்கும். அதுவன்றி இப்பொய்ந்நூல் கற்றுப்

பொழுது போக்கல் கரும்பிருக்க இரும்புகடித்தலும், விளக்கிருக்க மின்மினித் தீக்காய்தலும் போன்றதே யாகும்'' என்றறிவுறுத்தினர். அது கேட்ட அரசர், திருவருள் தூண்டுதலால் உண்மையுணரத் துடித்து, அமைச்சரை நோக்கி,

''அவகதையாய்ப் பயனற்ற கதையீ தாகில்
அம்மையும் இம்மையும் உறுதிபயக்கத்தக்க
சிவகதைஎது? அதுகற்ற திறமைப் பேரார்
சீவக சிந்தாமணி போல்இடையில் வந்த
நவகதையோ? புராதனமோ? முன்னூல் உண்டோ?
நானிலத்துச் சொன்னவரார்? கேட்போரார்?
தவகதையோ? தவம்பண்ணிப் பேறுபெற்ற
தனிக்கதையோ? அடைவுபடச் சாற்றும்'' என்றார்.

அரசரது ஆர்வத்தைக் கண்டு மகிழ்ந்த சேக்கிழார், 'அவை தாம் சிவனடியார்களின் சரிதைகள். அச்சரிதைகளைச் சுந்தரமூர்த்தி நாயனார் 'திருத்தொண்டத்தொகையால்' பாட, அதனை விரித்துத் 'திருத்தொண்டர் திருவந்தாதி யாக' நம்பியாண்டார் நம்பிகள் பாடியருளினர்; என்று கூறி அவ்வரலாறுகளை விரித்துக் கூறினர். அதுகேட்ட அரசர் மிகமகிழ்ந்து, ''இவ்வடியார்கள் வரலாற்றினை ஒரு பெருங்காப்பியமாகச் செய்து தருதல் வேண்டும்'' என்று அமைச்சரை வேண்டினர்.

அருண்மொழித் தேவரும் இசைந்து சிந்திக்கலானர். ''திருத்தொண்டர் பெருமக்கள் இவ்வுலகில் அறிவின் துணைகொண்டு வாழ்ந்தவரிலர்; அருளின் துணைகொண்டு வாழ்ந்தவர்கள். நான் நினைந்தேன், சொன்னேன, செய் தேன் எனும் தன்முனைப்பின்றி இறையருளால் நினைந்து, சொல்லி, செய்து வாழ்ந்தவர்கள். சித்தத்தைச் சிவன் பாலே வைத்து, உடலால் உலகியல் கருமங்களைக் கடப் பாடாகச் செய்து வாழ்ந்த உத்தமர்கள். அத்தகைய பெரு மக்களது வரலாற்றினை, அடியேன் அறிவின் துணை மட்டும் கொண்டுபாட முற்படுதல் தகுதியானதன்று. திருவாரூர்ப் பெருமான் முதலடி எடுத்துக் கொடுக்க

வன்றோ நம்பி ஆரூரர் 'திருத்தொண்டத் தொகையைப் பாடினூர். நாரையூர் தும்பிமுகன் பொருளுரைக்கவன்றோ நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி செய்தார். அடியேன் மட்டும் அறிவின் துணைகொண்டு பாட முற்படுதல் அறமாமோ'' என எண்ணிச் சிவ பெருமான் திருவருள் பெறும் நோக்கோடு அரசரிடம் விடைபெற்று, தில்லை நோக்கி விரைந்தார் அருண்மொழித் தேவர். தில்லை எல்லை வந்து தெண்டனாக விழுந்தெழுந்து வணங்கினூர். கமலத்தடத்தில் மூழ்கினூர். முண்டமான திருமுடியும், இட்ட திருநீறும், துணைக்குண்டலங்களும், திருககண்டமாலையும், கரமாலையும், சிரசுமாலையும், சிவ வடிவழகு பொலிய அணிந்து தவவேடங் கொண்டார். உச்சிமேல் கரங்குவித்து அம்பலவாணர் திருமுன் அடைந் தார். "அடிகேள், உனதடியார் சீர் அடியேன் உரைத் திட அடியெடுத்து இடர்கெடத் தருவாய்'' எனத் திரு வருளை எண்ணி இறைஞ்சினூர்.

அதுபோழ்து, பொன்னம்பலத்தினின்றும் "உல கெலாம்'' எனும் பேரொலி சீரடியார் செவிப்புலத்தெங்கு மாகி நிறைந்தது. உச்சிமேல் கரம்வைத்து உருகினூர் அனை வரும். 'உலகெலாம்' எனும் நாதத்துடன் ஒன்றினூர் அருண்மொழித் தேவர். காலம் கடந்த நாதத் தத்துவத்தில் ஒன்றியமையால், உலகம் யாவும் ஞானக்கண்முன் தோன்ற உலகில் வாழ்ந்த, வாழ்கின்ற, வாழும் அடியார் திறமெல் லாம் உணர்ந்தார். அவ்வாறு உணர்ந்தும் சிவபெருமான் அத்தனையும் கடந்து இத்தன்மையன், இவ்வண்ணத்தன் என ஓதுதற்கரியவனூகி நிற்கின்ற பெருமையினையும் உணர்ந்தார். அப்பெருமையினை யுடைய இறைவனே தன்னை வழிபடும் அடியார்க்கருளும் பொருட்டுத் தடத்த வடிவம் கொண்டு நிலவுலாவிய நீர்மலி வேணியனூகக் காட்சி தரும் மாட்சியினையும் உணர்ந்தார். அம்மாட்சி யுடைய இறைவனே உள்ளும் புறமுமாகி நின்று உயிர் களைக் காக்கும்பொருட்டு அருவுருவான சோதிவடிவாக எங்குமாகி நிற்பதையும் உணர்ந்தார். அவ்வாறு நின்ற பெருமானே அடியார்கள் ஐந்து பேரறிவாலும் ஆரத்

துய்க்க, தில்லையம்பலத்தில் கூத்தாடும் பெருமையினையும் கண்டார்.

அப்பேருணர்வுடனேயே, திருநெறித் தமிழ் தந்த நால்வரை முறைமையால் வணங்கிச் சிவ சாதனங்கள் தரித்து ஆயிரங்கால் மண்டபத்தை யடைந்தார். திருவருளையுன்னி யமர்ந்தார். தில்லைநிருத்தனார் தந்த சொல்லை முதலாகக் கொண்டு தாம் கொண்ட பேருணர்வு நிலையைப் பாடுவராகி,

"உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

எனத் திருவிருத்தத்தால் வாழ்த்திப் புராணத்தைத் தொடங்கலானார்.

உலகெலாமெனும் ஒலி, உணர்வுப் புலத்தே ஒலித்துக் கொண்டேயிருக்க, அவ்வுணர்வு நிலையிலே கண்ட காட்சிகளையெல்லாம் முறையாகப் பாடுவாராயினர். இந்நிலவுலகிலே தில்லை வரதர் பொற்றாள் தொழுத உயிரெலாம் உறுதியடையும் நிலைகண்டு பாடினார். மாக்களை இன் தமிழ்ச் செய்யுளாய் நடக்க தடக்கை ஐந்துகடக்கடக் களிற்றைக் கருத்துள் இருத்தி வழுத்தினா. மன்றுள் நடமாடும் பிரானைச் சொன்மலரால் துதி செய்யும் புனிதர் பேரவை சிறக்க வாழ்த்தினார். அப் புனிதர்முன் தம் சிறுமையை உன்னி அவையடக்கமும் அருளினார். தாம் பாடப்போகும் புராணத்தின் நாமம் 'திருத்தொண்டர் புராணம்' என நவின்றார். அடுத்து அவரது காட்சியில் புலப்பட்டது திருக்கயிலை. பொன்னின்மீது வெண் திருநீறு புனைந்தாற் போன்ற அப்பனி மலையில் தன்னையார்க்கும் அறிவரியானாகிய சிவபெருமான் கொலு வீற்றிருக்கும் தன்மையைப் பாடினார். அங்கு அடித்தொண்டு செய்து வரும் ஆலால சுந்தரரையும் கண்டார். மாதவம் செய்த தென்திசை, அடியார் பெருமையை உணர்ந்து வாழத் திரு

வுள்ளம் கொண்ட சிவபெருமான் ஆலால சுந்தரரை திருத் தொண்டத் தொகைபாட கமிழகம் அனுப்பிய கருணையை யும் உணர்ந்து பாடினர். ஆலால சுந்தரர் அவதரிக்க இருந்த காவிரி நாட்டையும், அவர் பேறுபெறுவதற்குரிய தாயிருந்த திருவாரூரையும், அத் திருவாரூர் ஆலய தேவா சிரிய மண்டபத்து வீற்றிருக்கும் அடியாரையும் பாடினர்.

ஆலால சுந்தரர் திருநாவலூரில் நம்பியாரூரராக அவ தரித்து, உலக மாயையில் சிக்குயுமலாமல் சிவபெருமானல் தடுத்தாட் கொள்ளப்பட்டு, திருவாரூரையடைந்து, திரு வாரூர் தியாசேகப் பெருமான் 'தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்குமடியேன்' என முதலடி எடுததுக் கொடுக்க அடியார்க்கு அடியனாக நின்று. திருத்தொண்டத் தொகை' பாடியமையைப் பாடினர். திருத்தொண்டத் தொகையுள் கூறப்பட்ட அடியார்களது தொண்டின் திறங்களெல்லாம் முறைப்படி கூறி வருகின்ற நெறியில், புராண நடுவுள் திருஞான சம்பந்தப் பெருமான் முத்துச் சிவிகை ஏறுகின்ற இடத்தில். தம் உணர்வுப் புலத்தே ஒலித்துக்கொண்டிருக் கும் உலகெலாம்' எனும் நாதத்தை நமக்கும் உணர்த்த வேண்டி

"சோதி முத்தின் சிவிகைசூழ் வந்து, பார்
மீது தாழ்ந்து, வெண் ணீற்றொளி போற்றிநின்(று)
ஆதி யாரரு ளாதலின் அஞ்செழுத்(து)
ஓதி ஏறினர் உய்ய உலகெலாம்"

எனப் பாடியருளினர்.

மேலும் தொடர்ந்து அடியார் பெருமைகளை யெல்லாம் அளவிட்டுக் கூறி நம்பியாரூரர் தம் பணி முடித்து ஆலால சுந்தரராய்க் கயிலையடைந்த சிறப்பினையும் பாடி,

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்."

என்று 'உலகெலாம்' என்ற நாதம் இறுதிவரை ஒலித்து நின்ற நிலையையும் உணர்த்தி. வாழ்த்தி 4253 செய்யுட் களால் புராணத்தை முடித்தார்.

அருண்மொழித்தேவர் புராணம் பாடி முடித்ததை யறிந்த அநபாயர் விரைந்து தில்லையடைந்தார். அருண்மொழியாரது தவக்கோலம் கண்டு, உவகை கொண்டு, தன்னையறியாது கைகள் தலைமீதுற, பாதம் விழுந்து வணங்கினர். பின் அம்பலவர் திருமுன்னணைந்து, கண்ணருவி தாரைகொள்ள, இருகைகள் அஞ்சலிகொள்ள, உரோமம் புளகிதம்கொள்ள, இன்பவாரி கரைபுரள, உரைகுழற அன்பொடு விம்மி விம்மி தொண்டருகமுன் விழுந்தெழுந்து பணிந்தார். அப்போது ககன வெளியிலே, சேக்கிழான நமது தொண்டர் சீர்பரவ, நாம் மகிழ்ந்து உலகெலாம் என்று வாக்கினால் அடியெடுத்துக் கொடுக்க நூல் செய்து முடித்தான். வளவ நீ இதை விரைவில் கேள" எனும் உரை எழுந்தது. அரசரும் மகிழ்ந்து யாவர்க்கும் ஓலை போக்கினன். சிவ சமயத்தார் யாவரும் வந்து திரண்டனர்.

சித்திரை ஆதிரை நாளில் புராண விரிவுரை தொடங்கப்பெற்றது. சிவபெருமான் திருநடம் செய்கின்ற மன்றின் முன்றிலை மறையவர் கோமயசலத்தால் மெழுகினர்; வெண்சுதை யொழுக்கினர்; அறுகால் பீடமிட்டனர்; அதன்மேல் பசும்பட்டு விரித்தனர்; அதன்மேல் வெள்ளை மடித்திட்டனர். மதுமலர் தூவினர்; விரைநறும் தூபம் கொடுத்தனர். தெள்ளுதமிழ்ச் சேக்கிழார் செய்த புராணத்தை அதன்மீது வைத்து இறைஞ்சிப் போற்றினர். அரசர், சேக்கிழாரை வேண்ட, சேக்கிழார் புராண விரிவுரையைத் தொடங்கினர். அடியவரெலாம் சூழவிருந்து வேதமொழி யெனக் கேட்டனர். கேட்க வருமடியவர்க்கெல்லாம் அரசர் உண்டி, உடை, உறையுள் கொடுத்துப் போற்றினர்.

இல்லறத்தார், துறவறத்தார், அரசர், வணிகர், வேளாளர், மீன் பிடிப்போர், போர்த் தொழிலாளர் இன்னோரன்ன பல இனத்தரும் பெண் மகளிரும் தொண்டு செய்து பேறுபெற்ற திருக்கதைகளைச் சேக்கிழார் விளங்க வுரைத்தார். எத்தொழில் புரிந்தாலும் எதவத்தைப்பட்டாலும் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் முத்தி நிச்

சயம் பெறுவர் எனும் பேருண்மையைச் சேக்கிழார் திரு வாக்கால் உணர்ந்த அவையோர்,

"ஒருலகோ! ஒரு திசையோ! ஒரு பதியோ! தம்மில்
ஒருமரபோ! ஒருபெயரோ! ஒருகாலந்தானே!
பேருலகில் ஒருமைநெறி தருங்கதையோ! பன்மைப்
பெருங்கதையோ! பேர்ஒன்றே! அல்லவே,யிதனை
ஏரு'லகெலாம் உணர்ந் தோதற்கரியவன்' என்று
இறைவன் முதலடி யெடுத்துக் கொடுத்தருளக்கொண்டு
பாருலகில் நாமகள்றின் றெடுத்துக் கைநீட்டப்
பாடிமுடித்தனர் தொண்டர்சீர் பரவவல்லார்."

என்று பாராட்டினர். 'தொண்டர் புராணத்தை அள விட சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிது' என வியந்தனர்.

இவ்வாறெல்லாம் யாவரும் வியப்ப விரிவுரையாற்றி மறுஆண்டு சித்திரை ஆதிரை நாளில் முடித்தார். 'அர' எனும் பேரொலி எழுந்து முழங்கியது. மறையவர் ஐந்தாம் வேதமெனப் போற்றினர். சிவமூல மந்திரத்தால் ஷோடச உபசாரணை செய்து பூசித்தனர். பட்டத்து யானை மீது பொற்கலசத்துடன் திருத்தொண்டர் புராணத்தை யும் ஏற்றுவித்து, சேக்கிழாரையும் உடனிருத்தி, தானும் பின்னிருந்து கவரிவீசி, 'இதுவனறோ நான செய்த தவப் பயன்' என்று கூறி வீதிவலம் செய்வித்தார் அரசர் பெரு மான். மக்கள் வாழை கட்டி, மாலை நாற்றி வீதி அணி செய்தனர். மறையவர் பூரண கும்பம் ஏந்தி, பொரி தூவி, தூபம் காட்டி, சுடர்விளக்கும் மணி விளக்கும் ஏற்றி ஆரணம் ஓதினர். அரம்பையர் வாழ்த்தினர். விண்மழை பொழிந்தது. தேவர்கள் பூமழை பொழிந்த னர். நாவலர் சொனமழை பொழிந்தனர். சோழர் இர வலர்க்குப் பொன்மழை பொழிந்தார். அன்பர்கள கண் மழை பொழிந்தனர். இவ்வாறு வீதிவலம் செய்து அம பலவர் திருமுன்றிலை யடைந்து, திருத்தொண்டர் புரா ணத்தை வைத்தனர். அரசர் சேக்கிழார்க்குத் 'தொண்டர்

சீர்பரவுவார்' எனும் திருநாமம் சாத்தினானமுடி சூட்டி வணங்கினர். திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்த்தனர் ஆன்றோர்.

சேக்கிழார் பெருமான் புராண அரங்கேற்றம் முடிந்ததும் தில்லையைவிட்டு விலகினாரில்லை. தில்லைப் பெருமானை நாளும் வணங்கி அடியார் பெருமைகளை உன்னிக் கசிந்தாராகி, வைகாசிப் பூசநாளிலே சிவபெருமான் திருவடி நிழலையடைந்தார்.

"தொண்டர் சீர்பரவு சேக்கிழார் குரிசில்
தூய தில்லைநகர் தன்னிலே
பண்டு மூவர் பதிகத்து வந்தஅறுபத்து
மூவர்கதை தனையுணர்ந்(து)
அண்ட வாணர் அடியார்கள் தம்முடன்
அருந்தவம் தனில்இருந்துபின்
இன்டை வைத்தசடை அம்பலத்தவர்
எடுத்த பாதநிழல் எய்தினர்."

என்பது உமாபதி சிவாசாரியார் திருவாக்கு.

சோழப் பேரரசர், சேக்கிழார் பெருமானின் தம்பியாகிய பாலறுவாயரை அமைச்சராக்கிப் போற்றினர். பாலறுவாயரும் குன்றத்தூரில் குளம் தோண்டி திருநாகேச்சர ஆலய வழிபாடும் அடியார் வழிபாடும் முட்டின்றிச் செய்து வந்தார். குன்றத்தூர் சென்னை நகரிலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் தென்மேற்குத் திசையில் திருநாகேச்சரம் நத்தம் எனும் இரு பகுதியாக உள்ளது. நத்தம் பகுதியில் முருகன் குன்றமுளது. சேக்கிழார் இல்லம் சேக்கிழார் ஆலயமாக அப்பகுதியில் விளங்குகின்றது. வைகாசி பூச நாளையொட்டி பத்துநாள் விழா அடியார் பெருமக்களால் அங்கு நடத்தப்படுகிறது. திருநாகேச்சரத்தில் சேக்கிழார் பெருமான் ஏற்படுத்திய ஆலயம் பூசனை வழிபாடுகளுடன் இன்றும் சிறப்புற விளங்கு

ஒன்றது. பாலரு வாயர் அமைத்த குளம், பல்லவராயர் கேணி என வழங்கப்பட்டு சிதைவுற்றுக் காணப்படுகிறது.

வாழி தில்லைமணி மன்றுள் என்றும்
நடமாடும் அங்கணர் மலர்ப்பாதம்;
வாழி காழிநகர்வாழ வந்ததிரு
நெறியராதிபதி வள்ளல்தாள்;
வாழி அன்பர்திருநீறும் இட்டதிருமுண்டமும்
துவய கவசமும்;
வாழி குன்றைமுனி சேவையாதிதிரு
வாய் மலர்ந்தருள் புராணமே.

திருச்சிற்றம்பலம்.

திகட சக்கரம்

(நக்கீரன் வழியடிமை.
வித்துவான் பி. மா. சோமசுந்தர முதலியார்)

1. தோற்றுவாய்

செந்தமிழ்க் குரவனும் கந்தப்பரமனின் திருவருட் டிறத்தை நம்மனோர் உய்ய நவில்வது கந்தபுராணம் ஆகும். இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் பெரும் பெயர் முருகனின் அரும் பெறல் தொண்டராய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் ஆவர். பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறுய முருகப்பரமன் இவர்கனவில் தோன்றி இந்நூலியற்றுமாறு கூறித் "திகட சக்கரச் செம்முகமைந் துளான்" எனும் அடியெடுத்துக் கொடுப்ப, இவர்,

"திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்."

எனும் காப்புச் செய்யுளை முதலாகக் கொண்டு நூலைப் பாடி முடித்தார். பின்னர் அரங்கேற்றுங்காலை மேற் செய்யுளின் முதலடியை, "திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்து உளான்" என்று பிரிவு செய்து பொருள் கூறப்புக்குழுன்று, ஆண்டிருந்த புலவரொருவர் "திகழ்+தசம்" என்பது "திகடசம்" எனப் புணர்தற்கு விதியின்றே எனத் தடை கிளத்தினர். அதுகண்டுளந்தளர்ந்த நூலாசிரியர் கனவில் வேலாயுதப்பரன் தோன்றி "நாளை இத்தடை ஒழியும்" என்றான். மறுநாள் மயிலூரிறைவன் ஒருபுலவனாகி அரங் கேற்றம் நிகழும் அவைக்கு வந்து வீரசோழியம் எனும் நூலின் சந்திப் படலத்துள்ள பதினெட்டாஞ் செய்யுளாகிய

"நான்கொடு மூன்றென்ப தாமுயிரின் பின்பு நவ்வருமே
லேன்ற ஞகாரம தாம்பதி னேந்திஞ்ஞே டெண்ணிரண்டாய்த்
தோன்று முடற்பின் றகாரம் வரினிரண்டும் மொருகா
லான்ற வைந்தாமுட லாமுன்பி லொற்றுக் கழிவுமுண்டே"

என்பதனைக் காட்டிக்கரந்தனன். அவையினர் அறு முகன் ஆடலையெண்ணி வியந்து நூலாசிரியரைப் போற்றிப் பணிந்தனர். இவ்வாறு ஒருகதை நாட்டில் உலவுகின்றது.

2. கற்பனைக்கதையா?

இவ்வரலாறு காணும் அறிஞரிற் பலர் இதன் உண்மை யில்லைபங்கொண்டனர். என்னை? "இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பலின்" என்ற மரபையே மாற்றி "இலக்கண மியம்புவதற் கிலக்கியம்" என அமைத்தலின் என்க.

இவ்வரலாற்றை யொப்பாத யாழ்ப்பாணம் வடகோவை சபாபதி நாவலரும் "ஆண்டு ழகரந் தகரத்தின் முன் டகர மாகத் திரிந்தது "விகட சக்கரன்" என்னும் எதுகை நோக்கி யாகலின், அது தொல்காப்பிய விதியா மன்றி விரோதமாகா தென்க. இன்னோரன்ன செய்யுட்டிரிபுகள் "கிளந்த வல்ல செய்யுளுட் டிரிநவும்" என்னும் அதிகாரப் புறனடையால்

அமைத்துக் கோடற்பாலன வென்க" என்று ஓராற்றான் அமைதி கூறுவாராயினர். ஆயினும் நடு நின்றாரைப் பார்க்கு இவ்வமைதி ஏற்புடைமையாகாது.

கந்தபுராணங் கேட்டோரில் 'வீரசோழியம்' எனும் நூலையறிந்தார் யாருமின்றெனை அப்புலவரவைக்கே ஓர் இழுக்கத்தை அக்கதை உண்டாக்கும். அன்றியும் வீர சோழியம்' என்றும் நன்கு பயிலப்படாமையே அதன் பெருமை இந்நிலைத்தென விளக்கும். இன்னோன்ன காரணங்களால் இக்கதையின் உண்மை நோக்கி ஐயமெழு தல் இயல்பே.

3. ஆய்வுமுறை

ஆகலின் தமிழ் நூல் வழக்காயப் புகுவோர் சான்றோர் வழக்கைத் துணைகொடு ஆய்வில் புகுதல் வேண்டும். சான்றாக "நுன்னருட் பானு" என்றதில் நுன்=உன்; நின் எனும் பொருளது. இது சுந்தரமூர்த்திகளது தமிழ் மறையினே "பொங்கா வொண்சுடரே நுனையே நினைந் திருந்தேன்" என வருதற்கண்ணுமுளது. "சலந்தரன் முதலா நுன்குலத் தலைவர் "எனத் தணிகைப் புராணத்துச் சிபரிபூரணப்படலத்து 133 ஆஞ் செய்யுளிலும் வந்துளது. வேறுசில நூற்கண்ணும் காணலாம். இவ்வாறு வரு வழக் கறியா வுரையாசிரியரொருவர், "சொல்வழுவென்பது சொல்லிலக்கணத்தொடு, புல்லா தாகிய புகர்படு மொழியே' என்ற தண்டியலங்காரச் சூத்திரத்திற்கு இச்சொற் புக்க வொரு செய்யுளைத்தானே யுதாரணமாகக் காட்டி அதிலுள்ள "நுனக்கு" என்பதை வழூஉச்சொற் புணர்க்கப் பட்டதாக வரைந்து வைத்தார். அது காட்டாகாதென மறுக்க. பன்மைக்கு நும் மெனுஞ் சொல் வரூஉ மென் றுணர்த்திய தொல்காப்பியனார் முதலிய இலக்கண நூலுடை யாரும் ஒருமைக்கு நுன்னென்பது வரூஉ மென்றுணர்த்தா மைக்குக் காரணம் யாதாமெனின், மேலைத் தமிழ்மறையிற்

போந்த தொத்த அடிப்பட்ட சான்றோர் வாக்கிய மவர்க்குக் கிடையாமை யாகலா மென்க"

என்று பாம்பன் ஸ்ரீமத் குமாருகுருதாச சுவாமிகள் அருளிச் செய்தமை காண்க. ஆகலின் முகரமுந் தகரமும் புணர்கால டகரமாக மாறுதல் ஆன்றோர் நூற்கண்பயின் றுளதா என்று ஆய்தலே அறிவுடைமையா மென்க.

4. பாலறுவாயர் அருளிச் செயல்

சிறியேனின் வல்வினைகள் நீங்கச் சீகாழிப் பதிக்கண் எழுந்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திகள், திருச்சேறைப் பதிப் பதிகத்தே

"துகடுறு விரிதுகி லுடையவ ரமணெனும் வடிவினர்
விகடம துறுசிறு மொழியவை நலமில வினவிடல்
முகிடரு மிளமதி யரவொடு மழகுற முதுநதி
திகடரு சடைமுடி யடிகடம் வளநகர் சேறையே

என்றருளிய பாடலில் "முகிழ்+தரும்" என்பது "முகிடரும்" எனவும் "திகழ்+தரும" என்பது 'திகடரும்' எனவும் புணர்ந்தமை காண்க. இதனைப்பின்பற்றியே "திகழ்+தசம்" என்பதை "திகடசம்" எனப் புணர்த் தார் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் என்க.

4. முடிப்புரை

ஆகலின் "திகழ்+தசம்" என்பது "திகடசம்" எனப் புணர்ந்தது சான்றோர் வழக்கின் பாலதே எனவும், வீர சோழியத்திற்கும் கந்தபுராணத்துக்கும் இயைபுண்மை காட்டுங் கதை கற்பனையே எனவும், அக்கதை கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளையும் ஏனைய அக்காலச் சைவப்புலவன் மாரையும் திருமுறை அறியா இழுக்கத் தட்படுத்துவதா மெனவும், கந்தபுராணத்தின் பெருமைநோக்கி அதனோடு இயைபுபடுத்தியேனும் வீரசோழியத்துக்குப் பெருமை தேட முயன்றார் ஒருவரின் இடைச்செருகலே இக்கதையா மெனவும் தெளியலாம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இரு பெரியார் மறைவு

(ஆசிரியர்)

1. ஸி. பாலசுப்பிரமணிய ஐயர்

மயிலை தர்மா ரக்ஷாமணி திரு ஸி. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் சமீபத்தில் தமது 78-ஆவது வயதில் இறைவன் திருவடி நிழல் அடைந்தார். அவர்கள் சென்ற 40 ஆண்டு களாகச் சென்னையில் சமயம், தர்மம், இலக்கியம் முதலான எல்லாத் துறைகளிலும் தோன்றிய நல்ல இயக்கங்களில் கலந்து கொண்டு விளக்கமளித்தவர். தந்தையார் பெருஞ் சிறப்பு வாய்ந்த வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் தோற்று வித்த சமஸ்கிருதக் கல்லூரி, வெங்கடரமண ஆயுர்வேத வைத்தியசாலை, இந்தியன் பாங்கி முதலிய பல ஸ்தாபனங் களில் பங்குகொண்டிருந்தார். சென்னை சர்வகலாசாலையில் சுமார் 20 வருஷ காலம் பங்குகொண்டிருந்தார். சங்கராச் சாரிய சுவாமிகளுக்கு வலது கை போல விளங்கினர். எல்லாவற்றிலும், எங்குமே, நிதானத்தைத் தாமும் கடைப் பிடித்துப் பிறரும் நிதானம் தவறாமல் ஒழுகுமாறு வற்புறுத்தி வந்தார். என்றும் எதிலும் ஒரு தப்பான வழியில் சென்று காரியத்தைச் சாதித்துக்கொள்ள அவர் விரும்பியதில்லை.

வடமொழிப் பாண்டித்தியம் நிரம்பிய அவர், தவறாமல் கீதை வகுப்புகள் நடத்தி வந்தார். கடமை உணர்ச்சி உந்தி அவர் இதைச் செய்தாரே யன்றி, புகழை விரும்பிச் செய்த தில்லை. அவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். டி. கே. சிதம்பர நாத முதலியார் அவர்களுடைய கம்ப ராமாயணப் பிரசங் கங்களில் தவறாமல் பங்கு கொண்டு, முதலியாரிடத்திலும், கம்பரிடத்திலும் இதயம் ஒன்றிக் கரைந்து விடும் பக்குவம் பெற்றவர். நீண்டகாலமாக அவர்களோடு எமக்குப் பழக்க முண்டு. யாம் காசிக்குச் சென்றபோது எம்மைப் பாராட்டி, வழியனுப்பியவர்களில் அவர் முக்கியமானவர். அவருடைய பாராட்டுதல் அப்போது கிடைத்தது (டிசம்பர் 194)

எமக்குப் பெறுதற்கரிய பேறு. பழக்கத்தை மறக்காமல் போற்றும் இயல்பு அவருக்குண்டு. ஒருமுறை தரும புரத்தில் அவரைப் பார்க்கச் சென்றிருந்தபோது அப்படியே கட்டித் தழுவிக் கொண்டு, கூட்டத்தில் போற்றிப் பேசிய பேச்சு இன்னும் நெஞ்சை விட்டு அகலவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, அவர் தேவார திருவாசகங் களில் அளவில்லாத தோய்வு உடையவர். எங்கு எது பேசினாலும் தேவார திருவாசகங்களைச் சொல்லாமல் இருக்க மாட்டார். அவருக்குத் தெரிந்த அளவு தேவார திரு வாசகப் பாடல்கள், மேடைப் பிரசங்கம் செய்யும் சைவர் களுக்கு மனப்பாடம் ஆகியிராது என்று சொன்னால் மிகை யாகாது. ஓராண்டுக்கு முன் மயிலாப்பூரில் நடந்த ஒரு பாவை மகாநாட்டுச் சிறப்புவிழாவில், சங்கீதம் வல்ல ஓர் அம்மையார் முதலில் வந்து கடவுள் வணக்கமாக ஒரு வட மொழிச் சுலோகம் பாடினர். மேடையில் வீற்றிருந்த இவர், சம்பந்தமே இல்லாமல் இருந்தும்கூட உடனே எழுந்து வந்து அழகாக ஒரு தேவாரம் பாடி விட்டுப் பிறகு உட்கார்ந்தார். இவருடைய தேவார பக்தி இதயத்தி லிருந்து விளைந்தது. இதில் இவருக்குச் சமானமாகச் சொல்லத்தக்கவர் டாக்டர் சாமிநாதையர் ஒருவர்தான். திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் திருப்புகழில் இதே தோய்வு கொண்டவர்.

பேங்குகளைத் தேசியமயமாக ஆக்கியபோது இவர் மனம் நொந்தது. தந்தையாரால் தோற்றுவிக்கப்பட்ட இந்தியன் பாங்கி சுதந்திரமாக நற்காரியங்களுக்குப் பயன்பட முடிய வில்லையே என மனம் வருந்தினர்.

சனாதனக் கோட்டையின் சிகரமாக விளங்கிய இப் பெரியார் தமிழ்ப்பண்பின் கனிந்த இதயமாகவும் விளங்கி னர். இவரது மறைவு எல்லாத்துறையிலும் ஈடு செய்ய முடி யாத ஒரு பெரு நஷ்டம். சதா இவர் தியானித்துக் கொண்

டிருந்த சிவபரம்பொருள் இவருடைய ஆன்மாவுக்கு மீண்டு வாராத முக்தி அளித்து, குடும்பத்தாருக்கும் போதிய தேறுதல் அளிப்பதாக.

2. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்

சென்னை அரசில் முன்னாள் முதல் மந்திரியாக இருந்த இராமசாமி ரெட்டியாரும் சமீபத்தில் காலமானார். இவர் நடுத்தர விவசாய குடும்பத்தில் பிறந்து காந்தி அடிகளுடைய தேசீயப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்று துன்பங்கள் அனுபவித்தவர். கண்டிப்பான சுபாவமுடையவராக இருந்தபடியால் தம்மோடு பழகியவர்களிடத்தில் நேர்மையையும், உழைப்பையும் எதிர்பார்த்தார். அவை இல்லாதபோது கண்டித்தார். அதனால் இவரைப் போற்றுபவர் அரியராயினர். ஒரு காலத்தில் அதிகம் படிக்காதவர்கள் முதல் மந்திரியாக வந்து காரியங்களை நன்முறையில் நிர்வகிக்க முடியும் என்று நிரூபித்தார். தர்மம் வெல்ல வேண்டுமென்றே எப்போதும் நினைத்தார். நடுத்தர விவசாயக் குடும்பங்கள் நன்னிலையில் இருந்தால்தான் இந்திய நாடு க்ஷேமமடையும், நாட்டில் உற்பத்தி பெருகும் என்று மனமார உணர்ந்து அதற்காகப் பாடுபட்டார். இதை ஒப்புக்கொள்ளாத காங்கிரஸ் ஸ்தாபனம் இவரைப் பதவியிலிருந்து வெருட்டிவிட்டது. பின்னர் இவர் வடலூரில் சென்று தங்கி வாழலானார். சைவத்தில் தீவிர ஈடுபாடும், இராமலிங்க சுவாமிகளிடத்தில் பக்தியும் உள்ளவர். நம் சமாஜ 46-ஆம் ஆண்டு விழா 1951ல் குன்றக் குடியில் நிகழ்ந்தபோது அவ்வாண்டுவிழாவுக்குத் தலைமை வகித்த பெரியார் ஆவார். அதிகார வர்க்கத்தில் இத்தகைய பக்தியும் ஒழுக்கமும் உடையவர்களைக் காண்பது அரிது. இறைவன் அவருடைய ஆன்மாவுக்குச் சாந்தி அருள்வானாக.

ஒரு தேவாரத் தரும் பொருள்

(வித்துவான் அம்பை சங்கரனார்)

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே.

இது திருஞான சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற சிறந்த செய்யுளாகும். தன் தந்தையால் ஏமாற்ற மடைந்த அத்தை மகனார் மீது இரக்கமுற்று தந்தையின் சொல்லைத்தான் உடன் போயாவது காப்பாற்ற வேண்டும் என்ற நன்னினைவோடு வந்த வைப்பூர்க்கோன் தாமன் செட்டியாரின் ஏழாவது பெண்ணின் துன்பந் துடைக்கும் காரணமாகத் திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியது இவ்வருமைப் பாடலை முதலாகக் கொண்ட பதிகமாகும்.

ஒரு நாள் சம்பந்தப் பெருமானார் திருமருகற் பெருமானை வணங்க வைகறைப்போது திருக்கோயிலை நோக்கி வந்துகொண்டிருந்தார். அவ்வமயம் அவ்வூர்ச் சத்திரத்தே தங்கிய செட்டிமகன் ஒருவன் பாம்புகடித்திறந்தான். அவனைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணி வந்த தாமன் செட்டியாரின் ஏழாவது மகள் அதுகண்டு மிகவும் துன்புற்றாள்; அழுதாள்; அரற்றினாள். வைகறைப்போது ஒரு தனிப்பெண்ணின் அழுகைக்குரல் ஞானசம்பந்தப் பெருமானார் காதுவரை எட்டியது. உடனே திருக்கோயிலை நோக்கிச் செல்லாது அவ்வழுகையொலி வந்த பக்கம் உசாவிவரச் செய்தார். அப்பெண்ணின் நிலையை அங்குள்ளோர் காழிப்பெருமானிடம் வந்து முறையிட்டார்கள். உடனே காழிப்பிரான் திருமருகற் பெம்மானிடம் வந்து முறையிட்டார்

காழிப்பிரான் திருமருகற் பெம்மானிடம் அப் பெண்ணுக்காக வாதாடுந் தன்மையிலுள்ளது இப்பாடல். இப்பாடலின் அருமை நயத்தினைச் சிந்தித்துப் பார்க்கின் தெற்றென விளங்கும்.

பெருமானே! நீ நல்ல நீர்வளமுள்ள பதியில் மிகவும் கவலையுற்றுச் செழிப்பாக விருக்கிறாய். ஆகையால் பிறர் படும் கவலையைப் பற்றி நினைந்து பார்க்குந் திறம் உனக் கிருக்காதோ? என்னும் குறிப்புத் தோன்ற,

"மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய்"

என அவர் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஊரின் நீர்வளம் முதலியவற்றை இனிது விளக்கினார். மேலும் நீயாகப் பார்த்துப் பரிந்து பிறர் துன்பம் துடைக்க முற் படாவிட்டாலும் துன்பப்பட்டோர் உன்னை அழைக்கும் போதாவது வந்து அவர்கள் துன்பத்தைத் துடைக்கக் கூடாதோ? நீ மிகவும் அருளாளனாயிற்றே. உனக்குக் கருணாகரன், கருணாநிதி, கிருபாகரன், கிருபாநிதி முதலிய பெயர்களெல்லாம் உள்ளனவே. அத்தகைய பேரரு ளாளன் நீ என்பதற்கடையாளமாகத்தான் நீ சடையைத் தாங்கியிருக்கிறாய், சடை குளிர்ச்சியுடையது. குளிர்ச்சி அருளுக்குரிய குறிப்பைப் புலப்படுத்துவது. "பனித்த சடையும்" என்ற தொடரையும் ஒப்பு நோக்கின் இவ் வுண்மை புலனாகும். அதனால் நீ அருளாளனாயிற்றே என்னும் நிலையில் உன்னைச் "சடையாய்" என்று விளிக் கிறாள். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே கதியாதலின் உன்னையே அடைக்கலமாக வந்துற்றேன் என்னும் நிலையில் "சரண் நீ" என்றும் கூறுகிறாள். நீ தரும தேவதை; அறத்தின் மூர்த்தி அதை உலகத்தாருக்குக் காட்டு முகத்தான் அறத்தின் அடையாளமாக விளங்கும் விடையை (ரிஷபத்தை) வாகனமாகக் கொண்டுள்ளாய், கொடியாகவும் பிடித்துள்ளாய். அதனால் நீதியே உருவாய்

அறநெறியிற் பிறழாது நிற்கின்றவனே என்னும் குறிப்புத் தோன்ற "விடையாய்" என்றும் விளிக்கின்றாள். இவ்வாறு பலபட விளித்தும் நீ சிறிதும் உன்னருளைப் புலப்படுத்தி அவளை ஆட்கொள்ளா நிலை கண்டு தன்வச மிழந்தவளாய் இன்ன செய்வதென்றறியாது மிகவும் அழுது மனம் நொந்து பயந்து விழுந்து விட்டாளே! இவ்வாறு ஒரு சிறு பெண்ணாகிய இவளைச் சோதிப்பது உனது பெருமைக்கு நியாயமா? என்னும் நிலையில் "இவள் உள்மெலிவு தகுமோ" என்று ஒரு வழக்கறிஞர் நீதித்தலத்தில் நீதிபதி முன்னர் வாதாடுவதுபோன்று மிக உரிமையோடு கேட்குந்திறம் நினைந்து நினைந்து இன்புறத் தக்கது. இதிலிருந்து சம்பந்தப் பெருமானார் உலகத்துயிர்கள் மாட்டுக்கொண்ட கருணைப் பெருக்கின் திறம் வெள்ளிடைமலையென விளங்குகின்றதன்றோ!

இப்பாடலைப் போன்று நம் அருமைத் தேவாரத் திருப்பதிகப் பாடல்களை ஊன்றிப் படித்துப் பார்க்கின் பத்திச்சுவை மாத்திரம் பயப்பன அல்ல; மிகவும் சிறந்த நயப்பகுதிகளையும் தம்பால் கொண்டு மிளிர்வன அவை என்பது தெற்றெனவிளங்கும். ஆகவே நம்மருமைத் திருமுறைகளை நனகினிது ஓதி இம்மை நலனையும் மறுமையின்பத்தையும் பெற்று மக்கள் மகிழ்வார்களாக. இதற்கு எல்லாம் வல்ல பரம்பொருளினின்னருளும் மக்களுக்குத் துணைசெய்யுமாக.

சமாஜத்தேர்வு

நம் சமாஜத்தாரால் நடத்தப் பெறும் இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகள் 28—11—70, 29-11-70 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10—1 மணி, மாலை 2—5 மணிகளில் இலங்கை மட்டக்களப்பு, திருச்சிற்றம்பலம், நாகர்கோயில் முதலிய விடங்களில் நிகழும். தேர்வுக்கு வருவோருக்குத்தனியாக அஞ்சல் மூலம் தேர்வு எழுதும் இடம் கால அட்டவணை முதலிய பற்றித் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மெய்கண்டார் விழா

மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் நினைவுக் கட்டளைச் சொற்பொழிவுகள்.

சைவசித்தாந்த சமாஜத்தின் ஆதரவில் மெய்கண்டார் விழாவை ஒட்டி 26-10-70 முதல் 30-10-70 வரை 5 நாட்களில் சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை மண்டபத்தில் திரு. கா. இராமநாதன் செட்டியார் நினைவுக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. இச்சொற் பொழிவுகளைத் "திருக்கோயில்" ஆசிரியர்-சித்தாந்தப் புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்., அவர்கள் ஆற்றினார்கள். இவர் இவ்வைந்து நாட்களிலும் சிவஞான போதத்துப் பாயிர இயல் உட்பட ஐந்து இயல்களையும் நாளுக்கு ஒரு இயலாக விளக்கினார்.

இச்சொற்பொழிவுகளுக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் போன்ற பெரும் புலவர்கள் பெருவாரியாக வந்திருந்து பயன் பெற்றனர். திரு. முருகவேள் அவர்கள் சிவஞான போதச்சூத்திரங்களைத் தமக்கே உரிய எளிய முறையில் விளக்கி, அவற்றிற்கு ஆதாரமாக ஆங்காங்கு திருமுறைகளிலிருந்து பாடல்களையும் நால்வர்கள் வாழ்க்கையிலிருந்து பல செய்திகளையும் எடுத்துக் கூறினார் மேலும் இவர், இடையிடையே தாம் திரு. ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், வேங்கடசாமி நாட்டார் ஆகியோரோடு பழகிப் பெற்ற அனுபவங்கள், செய்திகள், விளக்கங்கள் முதலியவற்றை உணர்ச்சியோடும் சுவைபடவும் கூறிச் சொற்பொழிவுகளுக்குக் கவர்ச்சியும் எழுச்சியும் ஊட்டினார். மேலும், இவர், ஆங்காங்கே நாலாயிரப் பிரபந்தம், அவற்றின் வியாக்யானங்கள், வைணவ மரபுகள் ஆகிய வற்றிலிருந்து எடுத்துக்காட்டிய உதாரணங்கள் வந்திருந்தோரை வியப்பில் ஆழ்த்தின. சைவசமய, சாத்திரக் கருத்துக்களுக்கு அரண் செய்வதற்கும், அவற்

றைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும் மற்றச் சமய அறிவு எவ்வளவு துணைபுரியும் என்பது அவர் கொடுத்த ஒப்புமைகளிலிருந்து தெளிவாயிற்று.

இச் சொற்பொழிவுகளின் நிறைவு நாளன்று திரு. பாலூர் கண்ணப்ப முதலியார், டாக்டர் ந. சஞ்சீவி, திரு. புரிசை முருகேச முதலியார் ஆகியோர் சொற்பொழி வாளரை மனமாரப் பாராட்டி வாழ்த்தினர். சமாஜத்தின் சார்பில் திரு. கொ. நீ சிங்காரவேலு யாவருக்கும் நன்றி தெரிவித்தார்.

வருந்துகின்ருேம்

நம் சமாஜத் தொண்டர் திரு. M. சந்திரசேகர முதலியார் அவர்கள் 28—10—70 புதன்கிழமை யன்று தம் 75-ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள் என் பதை அன்பர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள் கின்ருேம். அவர் நம் சமாஜப்பணிகளை விரும்பும்போது எல்லாம் தாமாக முன்வந்து செய்யு பண்பினர். ஒவ்வோ ராண்டிலும் மாநாடு நிகழுமிடங்களில் சமாஜ நூல்களைத் தாமே பொறுப்பாயிருந்து விற்கத் துணைபுரிந்தார். நம் சமாஜ அலுவலகத்தைத் திறந்துவைத்திருத்தல், சமாஜப் பொதுக்கூட்டங்கள் நிகழும் போது திருமயிலைக் கபாலீச் சரத்தில் உடனிருந்து துணைசெய்தல், ஆங்கில சைவ சித்தாந்தாவுக்கு, விளம்பரம் வாங்கித்தரல் முதலிய பல பணிகளை சமயமுன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஆற்றியவர். நம சமாஜச் செயற்குழு உறுப்பின ராகவும் பொருளாளராகவும் அவ்வக்காலத்துத் தொண் டாற்றியவர். அத்தகைய பெரியார் ஆண்டு முதிர்ந்த காலத் தும் சமய முன்னேற்றத்தில் பேரூக்கம் கொண்டிருந்தார். அப்பெரியார் ஆன்மா இறைவனிணையடி நீழலில் இன்ப மார்ந்திருக்க அவனருள் துணைசெய்ய அவனையே வணங்கி வேண்டுகின்ருேம்.

கருணையந்தாதி.

(வித்துவான். வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அடுக்குல கின்ற கருணைக் கடைக்க ணருளைப் பெற்று
லொடுக்கிட லாம்வினை யாற்றலை யார்க்கு முயர்ந்திடலாந்
திடுக்கிட லாஞ்சிர்தை திகைத்திட லாஞ்சின்ன பின்னஞ்செய்து
முடுக்கிட லாமெம தூதரைத் தென்றிசை முட்டவுமே. 94

முட்டலில் லாது மலர்தூவிச் செங்கை முகிழ்ப்பவரைச்
சிட்டரின் மேன்மை சிறக்கவைப் பாள்செழுஞ் செண்பகத்தின்
மட்டவிழ் பூக்கொளி வல்லிதன் கோயில் வலங்கொள்பணிக்
கிட்டமில் லாரைக்கை விட்டிடு வாளிங் கிடர்ப்படவே. 95

இடரும் பிணியு மயக்கமு நல்கி யெழுவகையாய்த்
தொடரும் பவத்தில் விடாதையம் மாசெந் துகிர்வனம்போ
லடருஞ் சடிலத் தவிநாசி முக்க ணமலர்வெற்பிற்
படருந் திருக்கரு ணாலயப் பச்சைப் பசுங்கொடியே. 96

கொடிபடுத் தானைப் பிரமாதி யிந்திர கோமகுட
மடிபடத் தாழு மவள்சன்னி தான மடைந்துவினை
பொடிபட நின்று புகழார்தென் காசியைப் போய்மிதியார்
செடிபடும் வாழ்வுகந் தார்சென்மந் தானென்ன சென்மங்களே. 97

சென்மம் பலவதிற் றேகம் பலவந்தத் தேகத்துக்குக்
கன்மம் பலவுமுன் னிசெய்த கற்பனை காண்பவர்யார்
மன்மந் தரங்கண்ட நஞ்சினுக் கெஞ்சினர் மாலயனும்
பொன்மங் கலவலி யாலன் றுயர்ந்தனன் பொன்வில்லியே. 98

வில்லிக் கவன்கணை யாற்காம மாதி விடயர்செயும்
மல்லிற் பெரிதிறு மாப்புறு மூர்க்க மனவயிரக்
கல்லைக் குழைத்துக் கனியாக்கிக் கொண்ட கருணைமலை
வல்லிக்கு நாயடி யேன்செய்ய வேறொர்கை மாறிலையே. 99

மாறுத மாய வுலகப்பொய் வாழ்க்கையை வாந்திசெய்த
சோறுகக் கண்டுன் சரணம் புயஞ்சிரஞ் சூடிக்கண்ணீர்
ஆறுய்மெய் யன்புகொண் டென்னுயிர் நின்னடி நீழலின்கீழ்ப்
பேறுக வைத்தரு ளம்மா கருணைப் பெருந்திருவே. 100

கருணையம்மன் துணை,

மதிப்புரை

திருவூசல், பஞ்ச சூதக விதிநிடேதம் என்னும் இரு நூல்கள் வரப்பெற்றோம். இவை திருத்துறையூர், திருவண்ணாமலை வீரசிம்மாசன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசப் பண்டார சந்நிதிகள் மீது பாடப்பெற்றன. இயற்றியோர் இன்னாரென்று அறிய வாய்ப்பில்லை. ஏட்டுச் சுவடிகளிலிருந்ததை அச்சு வாகனமேற்றிய பெருமை 22-ஆம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய பண்டார சந்நிதானம் அவர்களுக்குரியதாகும்.

திருவூசலில் பாயிரம் ஒன்று, நூல் எட்டு, வாழ்த்து ஒன்று ஆகப் பத்து பாடல்கள் அடங்கியுள்ளன. ஆதி சிவப்பிரகாச சுவாமிகளின் பெருமைகள் மிகவும் விளக்கமாக இங்குக் கூறப்பட்டுள்ளன.

பஞ்சசூதக விதி நிடேதம் என்பது ஐம்பது பாக்கள் அடங்கிய நூலாகும். வினாவிடை முறையில் இந்நூல் மிளிர்கின்றது. பஞ்சசூதகங்களாவன :—1. சனன சூதகம் 2. மரண சூதகம் 3. சண்டாள நீரிற்றோய்தல் 4. சூதகம் 5. பிரபஞ்ச அருந்தல் என்பனவாம். இச் சூதகங்களை ஏன் பார்த்தொழுக வேண்டும்? அவை அனுசரிக்காமையால் நேரும் இழுக்கென்னை? முதலிய பல சிறப்புக்களை இந்நூலில் காணலாம். யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவாராக. கிரௌன் அளவில் 2+14 பக்கங்கள் கொண்டது. விலை 25 காசுகள். நூல் கிடைக்குமிடம் :— ஸ்ரீமத் மகா சந்நிதானம், ஸ்ரீ குமாரதேவர் மடாலயம், அய்யனார் கோயில் தெரு, விருத்தாசலம், S A. Dt என்பதாம்.

(அம்பை)

சுத்த சாதகம் என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது ஸ்ரீ குமார தேவரால் அருளப்பெற்ற நூல்களுள் தலை சிறந்ததாகும். இது தத்துவமசி மகா வாக்கியத்திற்கு விளக்கம் கூறுமுகத்தான் இலிங்காங்க ஐக்கியத்தோடுள்ள வீரசைவ சமயத்தின் சிறப்பைப் பலபட எடுத்துக் கூறுகின்றது. 100 பாக்களால் இயன்றது. இவ்வாதீனத்துப் பரம்பரையில் பின்னர் வந்த ஸ்ரீமத் சொக்கலிங்க சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் வருத்தியுரையுமருளியுள்ளார்கள். இவ்வுரை, இந்நூலின் சிறப்பை மிகப்

போற்றிச் செல்லுந்திறம் படித்து இன்புறற்பாலதாம். மேலும் நூலின் முகப்பில் திருத்துறையூராதீன வரலாறும் அடங்கியுள்ளது.

கிரௌன் அளவில் 16+142 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1-50. திருப்போரூர் சிதம்பர சுவாமிகளின் குருவால் இயற்றப் பெற்றதெனின் இந்நூலின் பெருமை கூறாமலே விளங்கும். யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுக. நூல் கிடைக்குமிடம்:—ஸ்ரீமத் மகா சந்நிதானம், ஸ்ரீ குமாரதேவர் மடாலயம், அய்யனுர் கோயில் தெரு, விருத்தாசலம், S.A. Dt என்பதாம்.

விருத்தாசல புராணமும் இங்கே திருமடத்திலேயே கிடைக்கும். விலை ரூ. 2-00. (அம்பை)

"வாழ்வின் இதய கீதம்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்ருேம் இதன் ஆசிரியர் திரு. K. M. P. முகம்மது காசிம் ஆவர். இந்நூலில் பத்து தலைப்புகளில் மக்கள் சமய வாழ்வு மேற்கொண்டு நன்னிலையடைய வேண்டிய வழிகளை ஆசிரியர் நன்கு வகுத்துக் கூறுகிருர். ஆத்மீக வாழ்வின் அவசியம், தியானத்தால் பெறும் இன்பம் முதலிய பல உண்மைகள் வற்புறுத்தப்படுகின்றன. வழிகாட்டும் ஒளி விளக்கு என்னும் பகுதியில் சிந்தனைக்குச் சிறப்புத் தரவல்ல மேலான அறிவுரைகளை ஆசிரியர் தந்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. இந்நூலைப் பார்க்கும்போது இவ்வாசிரியர் ஈழநாட்டுக் கபீர்தாசர் அல்லது மஸ்தான் சாகிபு என்று கூறலாம்போல் தெரிகிறது. இவர் ஈழநாட்டில் சாந்தி நிலையத்தின் நிறுவனரும் தலைவருமாய் விளங்குகின்ருர். இவர் இல்லத்தரசியார் ஸ்ரீமதி மதார் நாச்சியாரும் இவருக்கு இத்துறையில் உறுதுணையாயிருப்பது மிகவும் போற்றத்தக்கது. இவர் முயற்சி வெல்க. இந்நூல் 4+44 பக்கங்கள் கொண்டது. விலை குறிக்கப் பெறவில்லை. நூல் வேண்டுவோர் கீழ்க்காணும் முகவரிக்கெழுதி உரிய விலை கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். நூல் கிடைக்குமிடம்:—திரு K. M. P. முகம்மது காசிம், தபால் பெட்டி எண் 11. Veyangoda, Ceylon என்பதாம். (அம்பை)